ஓலை கொண்டு வந்துள்ளேன் ஐயா!

பெருமதிப்பிற்குரிய நாகலிங்கம் அய்யா அவர்களிற்கு

உங்களிற்கு யாரோ முடிசூட்டி விட்டார்களாம் என்கிற செய்தி அறிந்ததும் பதறிப் போய்விட்டேன். அதே போலவே நீங்களும் அந்தத் தருணத்தில் பதறிப் போயிருப்பீர்கள்.

அந்த நேரம் உங்கள் உள்ளம் என்ன வேதனைப் பட்டிருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் போது என் வேதனை இன்னமும் அதிகரிக்கின்றது.ஏனெனில் உங்களை இன்று நேற்றல்ல நீங்கள் இணுவிலில் கற்பித்த காலத்திருந்து நான் அறிந்தவன்.

ஊருக்கு நீங்கள் செய்த உபகாரங்கள் எத்தனையோ எத்தனையோ. அதுமட்டுமல்ல புலம் பெயர்ந்து வந்த தேசத்திலும் கொடுத்தே பழக்கப்பட்ட கைகளை பொத்தி வைக்க முடியாமல் நீங்கள் புலம்பெயர் தேசத்திலும் பொதுநலத் தொண்டுகளையும் தன்னலமற்ற தமிழ் தொண்டுகளையும் பார்த்து நான் பூரித்து போயிருக் கிறேன். பூமாலை பொன்னாடை புழுகித்தள்ளும் புகழ்சிகள் இவற்றுக்கு அடிமையாகாத பண்பு அதற் கும் மேலாக உங்கள் தற்புகழ்ச்சி பிடிக்காத தன்ன டக்கம். இவைகளிற்காகவே எங்கள் தேசியத்தலைவரே அவர்கள் கையால் உங்களிற்கு விருது வழங்கி கொளரவித்திருந்தார்.

தமிழனாய்ப் பிறந்த ஒருவனிற்கு அவனது வாழ் நாளில் இதைவிடப் பெரிய கௌரவம் வேறு என்ன வேண்டும்.

ஆனாலும் இந்திய அரசியல் சாக்கடையின் சம்பிரதாயங்களான முடிசூடுதல். வீரவாள் கேடயம் கொடுத்தல், காலில் விழுதல், விரலைக் கீறி இரத்தத்தால் வெற்றித் திலகமிடுதல், பச்சை குத்துதல், பட்டங்கள் கொடுத்து பொன்னாடை போர்த்தி புகழ்ந்து தள்ளிவிட்டு பின்னர் அடுத்த மேடையிடையில் அதே நபரை தூற்றி துவேசித்தல், அடுத்தவேளை சோற்றுக்கு வழியில்லாத தொண்டன் தலைவர் வாழ்கவென தொண்டை கிழிய கத் துதல், இவையெல்லாம் பெரியளவில் இல்லாவிட்டா லும் எங்கள் ஈழத்தமிழர் சமூகத்திலும் முன்னைய காலங் களில் சிறிதளவு தொற்றியிருந்தது உண்மைதான்.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் அழிவோடு அந்த சம்பிரதாயங்களும் அழிந்து போய் விட்டன. ஈழத்தில் புதிதாய்ப் பிறப்பெடுத்த எம் புதிய சமுதாயம் புலிகள் காலத்தில் உலகே வியக்கும் பல புதுமைகளை செய்து கொண்டிருக்கும் வேளை புலம் பெயர்தேசத்து தமிழர்கள் பிடுங்கியெறியப்பட்ட பழைய சம்பிரதாயங்களை தேடியெடுத்து புளி போட்டுத் தேய்த்து புது முலாம் பூசிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு முற்போக்குவாதியான உங்களால் இவற்றையெல் லாம் எப்படி தாங்கிக்கொள்ள முடிகின்றது. அய்யா யேசு நாதருக்கு யூதர்கள் முள்முடி சூட்டி சவுக்கால் அடித்து சிலுவையை சுமக்கச் சொன்னபொழுது அவர் யூதர்களைப் பார்த்து கோபப்படாமல் கடவுளிடம் 'தந்தையே இவர்கள் தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதனை அறியாப் பாவிகளாய் இருக்கின்றனர் எனவே இவர்களை மன்னியுங்கள்' என்று வேண்டிக் கொண்டாராம்.

அதே போலத் தான் அன்று ஜெர்மன் கிறீபீல்ட் நகரில் உங்கள் தலையில் சூட்டப்பட்ட அந்த முடி நிச்சயம் உங்களிற்கு முள்முடியாக வேதனை தந்திருக்கும். ஆகவே அவர்கள் அறியாமல் செய்த பாவத்தை நீங்கள் மன்னித் தருளுங்கள் என்று நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

- சாத்திரி

உயிர்காக்க உதவி



உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ்மக்களே ஊடகத்துறை சார்ந்த வர்களே உதவி செய்யுங் கள். இந்தக் குழந்தையின் உயிர் காக்க உடனடியாக இரத்தம் தேவை.

இரத்தம் A,B,O,AB என்கிற பிரிவு பிரச்சனை இல்லை ஏனெனனில். ஏற்கனவே எங்களில் இருக் கின்ற பிரிவுகளே போதும். ஆனால் இரத்தத்தில் இனஉணர்வு.விடுதலையுணர்வு. எல்லாவற்றிற்கும் மேலாக பட்டம் பதவி ஆசைகளற்ற கடமையுணர்வு. இவை எல்லாம் கலந்த புது இரத்தம் உடனடியாகத் தேவை.

ஏனெனில் நோயாளிக் குழந்தை மிகவும் அபாயக் கட்டத்தில் கோமா நிலைக்கு சென்று கொண்டிருக் கின்றது.

இந்தக் குழந்தையின் பெயர் சர்வதேச தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம். இது 24.06.06 அன்று இலண்டனில் பிறந்து இதற்கு ஒன்றரை வயதாகிவிட்டது.

இந்த ஒன்றரை வயதில் நான்கு பிறந்த நாட்களை அதுவும் பிரான்சில் இரண்டு. ஜெர்மனியில் இரண்டு என நான்கு பிறந்த நாட்களை கோலாகலமாக கொண்டாடி முடித்துள்ளது.இந்தப் பிள்ளையாவது வளர்ந்து தமிழ் ஊடகத்துறையில் ஆக்கபூர்வமான மாற்றங்களையும் உலகநாடுகளெங்கும் சிதறிப் போய் கிடக்கும் பல சிந்தனையுள்ள பத்திரிகையாளர்களையும் பல ஊடகங்களையும் ஒன்றாக்கி உறவாக்கி ஏதோ சாதனை செய்யப் போகின்றது என்று கற்பனையில் இருக்க. இதற்கு வியாதி பிடித்து அதன் உறவினர்களாலேயே கவனிக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில், இந்தக் குழந்தைக்கு பால்மா வாங்கவே சிரமப்படும் தாயாரால் வைத்தியத்தை எப்படிப் பார்க்கப் போகிறார் என பதுதான் கவலை.

குழந்தையின் உறவுகள்பற்றிய விபரம்.

இந்தக் குழந்தை அவதாரக்குழந்தை என்பதால் தாயார் மட்டுமே உள்ளார் .

தாயார் பெயர் ஆனந்தி சூரியப்பிரகாசம் - தலைவர் (முன்னாள் பி.பி.சி. தமிழோசையின் பணிப்பாளர்.)

சித்தப்பா மற்றும் இந்தக் குழந்தையின் வைத்தியர். இரா துரைரட்ணம் - உப தலைவர் (இலங்கை தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் பத்திரிகையாளர்.) இவரும் குழந்தைக்கு வைத் தியம் பார்க்காமல் கைவிட்டுள்ளதாகவே அறிய முடிகின்றது.

குகதாசன் குஞ்சியப்பு - டென்மார்க்(பத்திரிகையாளர்)

கோபி மாமா - இங்கிலாந்து (ஒரு பேப்பர் பத்திரிகை ஆசிரியர்)

பற்றிமாகரன் தாத்தா - இங்கிலாந்து (அரசியல் ஆய் வாளர் மற்றும் பத்திரிகையாளர்)

சிவா சின்னப்பொடி - பிரான்ஸ்(பத்திரிகையாளர்)

றூபினி செல்வநாதன் - ஜெர்மனி

வேந்தர்கோன் - இங்கிலாந்து (வடலி பத்திரிகை ஆசிரியர்)

கந்தசாமி - இங்கிலாந்து

இப்படி உலகெங்கும் பலமான பிரபல்யமான உறவினர்கள் இருந்தும் இந்தக் குழந்தையை காப்பாற்ற முடியாமல் போயுள்ளது.

இந்தக்குழந்தையும் அவ்வப்போது சில சிணுங்கல் களுடன் (சில அறிக்கைகள்) நித்திரையாகி விடுகின்றது. எனவே இனிவரும் காலங்களிலாவது சம்பந்தப்பட் டவர்கள் ஊட்டச் சத்துக்கள் ஊட்டி இந்தக் குழந்தையை காப்பாற்றுவார்களா?

- சாத்திரி

கவனம்

இலக்கியம் பேசுபவனோடு குடித்தல் ஆபத்து
போதையும் ஏறாது பேசுவதும் புரியாது.
முடிவில் உங்களை முட்டாள் என்பான்

குழந்தை பராமளிப்பாளர் தேவை

Manchester பகுதியில் ஒரு வருட காலத்திற்கு குழந்தையை பராமரிக்க ஆள் தேவை. தொடர்புகளுக்கு: ***Dr K Sivanesan 07867973327***

Chef Wanted

Wanted for a busy Sri Lankan restaurant in Balham. CHEF (Experience Essential) WAITER / WAITRESS (Experience & Excellent English Essential) Good rates of pay available Please call ***0772 054 7714***

Freehold shop for sale

Off licence,grocery,newsagent,lottery,paypoint with One bed room upstairs for £299,000 in Gilingam. Call ***Arun*** *on* ***07926 000 000***

Newsagent/Offlicence for sale

CTN & offlicence for sale in busy highstreet in Islington, Leasehold £50,000+sav, Shop sales £5,000pw + busspass £1900pw & epay £600pw Potential for improvement. Please call ***020 7263 8096*** *between 10am & 8pm.*

Private Tuition (South West London)

Individual and group classes for: Year 3 toYear 6 Maths, Science & English 11+ Exam. Practise (Maths), Year 7 to GCSE Maths, A Level – Pure Maths, Statistics & Physics Affordable Fees. By qualified & experienced teacher Call ***Kala B.Sc*** *(Hon), PGCE Tel:* ***020 8648 2770*** *Mob:* ***07946 598 292***

வேலைக்கு ஆள் தேவை

ஊடக நிறுவனம் ஒன்றிற்கு நிர்வாகப் பகுதியில பணி புரிய பெண் ஒருவர் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 020 7043 4316

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spead head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML, CSS, Dreamweaver, Flash
- Graphic design packages like Adobe photoshop

Knowledge of scripting language is highly desirable.

Please forward your CV to ***info@orupaper.com***

Web developer

We are looking for Web Developer to join our small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML, - CSS, - Dream Weaver, - Flash, - Graphic design packages like Adobe photoshop

Knwledge of scripting language is highly desirable.

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX, - MySQL , Postgresql, - Apache
- PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Send your CV to *info@orupaper.com.*

அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் பொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.

Ram: 07861 371 837 / Thas: 07885 987 857